1972 ஆகஸ்ட் 25]

மாண்புமிகு திரு க. இராசாராம் : நம்முடைய அரசு 10 கோடி ரூபாய்க்கும் மேலாக பல திட்டங்களை மத்திய அரசுக்கு சமர்ப்பித்தது. அதற்கு தற்போது நிதி ஒதுக்க வசதியில்லை என்று கூறி, மத்திய அரசிடமிருந்து நம்முடைய கோரிக்கையை நிராகரித்து பதில் வந்திருக்கிறது.

திரு க. சுப்பு : தலைவரவர்களே, இராயப்பேட்டை காலனியில் குடியிருக்கும் நிருபர்கள் ஜூலை மாத வாடகைப்பணம் செலுத்தியிருந்தும், அவர்களை வீட்டை காலி செய்யுங்கள் என்று நோட்டீஸ் அனுப்பப்பட்டதா ? அதன் மீது அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு க. இராசாராம் : அது பற்றிய குறிப்புகள் தற்போது என்னிடத்தில் இல்லை. தனிக்கேள்வி போட்டால் பதில் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மூலக் கேள்விக்கும் இந்தத் துணைக் கேள்விக்கும் சம்பந்தம் இல்லை. உறுப்பினர்கள் துணைக் கேள்வியை கேட்கிறபோது அது மூலக் கேள்வியை ஒட்டியதாக இருக்கவேண்டும்.

திரு கே. டி. கே. தங்கமணி : மத்திய அரசிடமிருந்து நிதி நமக்கு கிடைக்கிற வரையில், ஏற்கெனவே, காலனியில் இருக்கக்கூடியவர்களை வெளியேற்றுவண்ணம் பாதுகாப்பு கொடுக்கப்படுமா? அல்லது நோட்டீஸ் கொடுத்து வெளியேற்றப்படுவார்களா ?

மாண்புமிகு திரு க. இராசாராம் : அதற்காக தக்க பாதுகாப்புகள் அளிக்கப்பட்டு வருகின்றன.

* 350. *Q.*—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Backward Classes be pleased to state—

(*a*) whether the Government order that Co-operative Housing loans could be granted for the construction of flats only has been cancelled ; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு க. இராசாராம் : (அ) ஆம்.

(இ) சென்னை, கோயம்புத்தூர், மதுரை, திருச்சிராப்பள்ளி முதலிய நகரங்களில் கூட்டுறவு திட்டத்தின் கீழ் கொடுக்கப்படும் கடன்கள் பல அடுக்கு மாடி வீடுகள் கட்டுவதற்கே வழங்கப்பட வேண்டும் என ஒரு ஆணை 1966-ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்களில் பிறப்பிக்கப்பட்டது. இத்தடையின் காரணமாக நிலம் வைத்திருப்பவர்கள் பல அடுக்கு மாடி வீடுகள் கட்ட விரும்பவில்லை என்றும், வீடு கட்ட கூட்டுறவு சங்கத்திடமிருந்து கடன் வாங்க நினைத்த பலர்

கடன் அடைய முடியாத நிலைமையில் பல மனைகள் காலியாக இருந்தன எனவும் அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப் பட்டது. ஆகையால் மேலே கூறிய தடையை 5 ஆண்டு களுக்கு நிறுத்தி வைக்கலாம் என்று 1969-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் உத்தரவிடப்பட்டது. பின்னர் இந்த பிரச்சினையை அரசு மறு பரிசீலனை செய்து 1972-ஆம் ஆண்டு மே திங்களில் இந்தத் தடையை முழுவதும் நீக்க ஆணை பிறப்பித்துள்ளது.

THIRU N. DENNIS : Sir, may I know whether the Government have issued orders for stoping financial assistance to the Co-operative Building Societies ?

மாண்புமிகு திரு க. இராசாராம் : தலைவரவர்களே, அப்படிப்பட்ட திட்டம் எதுவும் தற்போது இல்லை.

சீரணித் தொண்டர்கள்.

* 351 வினா—திரு என். கிட்டப்பா : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை நகரில் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துத் துறைப் பேருந்து நிற்குமிடங்களில் பணியாற்றும் சீரணித் தொண்டர்களை முழு நேர ஊழியர்களாக நியமிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன் : இல்லை.

திரு என். கிட்டப்பா : தலைவரவர்களே, இந்தச் சீரணித் தொண்டர்கள் போக்குவரத்துத் துறைக்கு மிகவும் சிறப்பாக உதவி செய்து கொண்டு இருக்கிறார்கள். எனவே போக்குவரத்துத் துறைக்கு வேலைக்காக ஆட்கள் சேர்க்கப்படும்போது இந்தச் சீரணித் தொண்டர்களுக்கு முதலிடம் தர அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, சென்னை நகர போக்குவரத்துப் பொறுத்தவரையில் சீரணித் தொண்டர்கள் நல்ல முறையில் பணியாற்றி வருகிறார்கள் என்பது உண்மை. ஆனால் அதே நேரத்தில் அவர்களைத் தான் எடுத்துக் கொள்ளவேண்டுமென்று சொல்வது சரியல்ல. தகுதி, மற்றவையெல்லாம் ஒன்றாக இருக்குமானால், வெளியே இருந்து வேலைக்கு ஆட்களை எடுக்கும்போது, சீரணித் தொண்டர்களுக்கு முன் உரிமை வழங்கப்படும்.

திரு நா. வீராசாமி : தலைவரவர்களே, முழு நேர வேலைக்கு அவர் களை எடுப்பதற்கு வாய்ப்பு இல்லையென்றாலும், அன்றாடம் பீக்-அவர்சில் அந்தச் சீரணித் தொண்டர்களின் சர்வீஸ்களைபயன்படுத்திக் கொள்ள அரசு முன்வருமா ?